**செ. கு. எண்**: 214 **நாள்**: 07.06.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 7.6.2012

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், சிவரக்கோட்டை கிராமம் நான்கு வழிச் சாலையில் 6.6.2012 அன்று திருப்பூரிலிருந்து திருநெல்வேலிக்குச் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து முன்னால் சென்று கொண்டிருந்த லாரி மீது மோதியதில், பேருந்தில் பயணம் செய்த திருநெல்வேலி மாவட்டம், பரப்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. குணசேகரன் என்பரின் மனைவி திருமதி சாந்தி, திருப்பூரைச் சேர்ந்த திரு. சிவா என்பரின் மனைவி திருமதி கிருஷ்ணவேணி, அவரின் மூன்று வயது குழந்தை ஸ்ரீதர் மற்றும் அப்பேருந்தின் நடத்துநர் திரு. விஜயன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இச்சாலை விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் 15 நபர்கள் காயம் அடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், மதுரை மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த பேருந்தின் நடத்துநர் திரு. விஜயன் குடும்பத்திற்கு இரண்டு லட்சம் ரூபாயும், திருமதி சாந்தி, திருமதி கிருஷ்ணவேணி, குழந்தை ஸ்ரீதர் ஆகியோரின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**